1996 ஆகஸ்ட் 20]

25--

ஓமலூரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை துவங்குதல்

*வினா எண் 806--***திரு. ஆர். ஆர். சேகரன்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை துவங்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, கோட்டமேட்டுப்பட்டி கிராமம் புல எண் 22/2 மற்றும் 25/3-ல் தனியாருக்குச் சொந்தமான 8.29 ஏக்கர் நிலம் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பயிற்சி மையம் அமைக்க நிலம் கையகப்படுத்தக்கோரி 1-2-84-ல் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்கட்கு விண்ணப்பிக்கப்பட்டது. இதுகுறித்து நில உரிமையாளர்களால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தடை ஆணை பெற்றதால் தற்போது இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆகவே ஓமலூரில் உடனடியாக தற்காலிக பணிமனை அமைக்கும் பொருட்டு புல எண் 34/1-ல் உள்ள தனியாருக்குச் சொந்தமான சுமார் 1.50 ஏக்கர் நிலத்தை வாடகைக்குப் பெற்று தற்காலிகமாக பணிமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவடைந்ததும் பணிமனை செயல்படத் துவங்கும்.

26--

நர்க்கந்தன்குடி வழியாக பேருந்து இயக்குதல்

*வினா எண் 1308--***திரு. அ.வ. அப்துல் நாசர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சிதம்பரம்--ராதாவிளாகம் பேருந்து நர்க்கந்தன்குடி வழியாக இயக்கப்படுமா?

[1996 ஆகஸ்ட் 20

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சிதம்பரத்திலிருந்து நர்க்கந்தன்குடி வழியாக ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வந்த நகரப்பேருந்து மேற்படி தடத்தில் நர்க்கந்தன்குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கத்திற்கு முற்றும் ஒவ்வாத நிலையில் சேதமடைந்து இருந்ததினால் நர்க்கந்தன்குடி வழியாக இயக்கப்படாமல் மாற்றுப்பாதை வழியாக இயக்கப்பட்டு வந்தது. தற்பொழுது நர்க்கந்தன் குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கிடுவதற்கேற்ப செப்பனிடப்பட்டுள்ளமையால், 15-7-1996 முதல் சிதம்பரத்திலிருந்து ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வரும் பேருந்து நர்கந்தன்குடி வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

27-

பரங்கிப்பேட்டை அரியகோஷ்டி இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் 1309--**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்குப் பேருந்து இயக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக சிதம்பரம்-கடலூர் பிரதான சாலை 3.2 கி.மீ. தொலைவிலுள்ளது. மேற்படி சாலைப் பகுதி கருங்கல் கப்பிச் சாலை. தற்பொழுது கற்கள் பெயர்ந்து சாலையில் பரவிக் கிடப்பதுடன் சாலை ஆங்காங்கே குண்டும் குழியுமாய் உள்ளது. மேலும் சாலை சீரமைப்புப் பணிக்காக கருங்கற்களும் செம்மண்ணும் சாலையோரத்தில் கொட்டி வைக்கப்பட்டுள்ளதால், சாலை மிகவும் குறுகலாக பேருந்து இயக்க இயலாத நிலையிலுள்ளது. பாதுகாப்பான பேருந்து போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் சாலை சீரமைக்கப்பட்ட பின்னர், பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்கு பேருந்து இயக்கிடக் கோரும் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.